1982 ஏப்ரல் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** ** என்ற வார்த்தைகள் நீக்கப்படுகின்றன.

(ஆ) அரசு அலுவலர்களின் பதவிக்கால நீட்டிப்பு

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைத் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அரசாங்க அதிகாரிகளுடைய பதவிக் காலம் நீட்டிப்பு கிடையாது. அந்த உரிய காலம் முடிந்த உடன் அவர்கள் வீட்டுக்கு அனுப்பப்படுவர்கள் என்ற நிலைதான் என்னுடைய ஆட்சியிலே நிலைநிறுத்தப்படும் என்று சொன்னார்கள். ஆனால் எக்சைஸ் கமிஷனர் சுப்பிரமணியம் அவர்களுடைய பதவிக்காலம் முடிந்தும் அவர் மீண்டும் ரி-எம்ப்ளாய்மெண்ட் கொடுக்கப்பட்டிருக்கிறார் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கொள்கைப் பிரச்சினை. பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

திருச்சி மாவட்டத்தில் சூறைக் காற்றினால் வாழைகளுக்கு ஏற்பட்ட சேதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் இரெ. இராசமாணிக்கம், பி. எம். தங்கவேல்ராஜ், பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர், ''திருச்சி மாவட்டம், தொட்டியம் பகுதியிலும், நத்தம், காடுவெட்டி, சீனிவாசநல்லூர், ஏரிக்குளம் மற்றும் பல்வேறு பகுதிகளில் 27— 3— 82 அன்று வீசிய சூறைக் காற்றினால் சுமார் 200 ஏக்கருக்குமேல் வாழைகள் அழிந்து ரூபாய் 10 இலட்சத்திற்கு மேல் சேதம் ஏற்பட்டுள்ளதால் அப்பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு உடன் நிவாரணம் அளிக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி திரு. இரெ. இராசமாணிக்கம் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 27— 3— 1982 அன்று திருச்சி மாவட்டத்திலே, தொட்டியம் பகுதியிலும், இன்னும் அதனுடைய சுற்றுப் பகுதியிலும் அடித்த சூறைக்காற்றினால், அந்தப் பகுதியிலுள்ள 200 ஏக்கருக்கு மேல் பயிரிட்டுள்ள வாழைகள் அழிந்து, சுமார் 10 லட்சம் ரூபாய் அளவிற்கு சேதம் எற்பட்டு இருப்பதாக தகவல் வந்திருக்கிறது. தொட்டியம், நத்தம், காடுவெட்டி, சீனிவாச நல்லூர், ஏரிகுளம், மேடு மகாதானபுரம், குளித்தலை மற்றும் அதனுடைய சுற்றுவட்டாரங்களில் இப்படிப்பட்ட ஒரு கொடிய சூறைக்காற்றினால் பெரிய சேதம் வாழைப்பயிர்களுக்கு விவசாயிகளுக்கு ஏற்பட்டு இருப்பதாக தகவல் தந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.